**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.188/2022**

| Deposition of Name | ரமேஷ் | Prosecution | LW-3 as PW-2 |
|---|---|---|---|
| Father Name | ராமச்சந்திரன் | Defence | |
| Village | சன்னாவோடை | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 32/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **21.08.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை, குவிமுச 317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த **03.08.2020** ம் தேதி மதியம் **12.00** மணியளவில் அசா.**1** யை எதிரிகள் தாக்கியது குறித்து எனது தம்பி பரஞ்சோதி என்பவர் தொலைபேசி மூலம் தகவல் சொன்னார். நான் சீர்காழி **GH**க்கு சென்று அசா.**1**யை பார்த்தேன். அசா.**1**க்கு தலையில் கட்டுபோட்டு இருந்தார்கள். மறுநாள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததல் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துவைக்கப்பட்டது.**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.188/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜா | Prosecution | LW-1 as PW-1 |
| Father Name | ராமு | Defence | |
| Village | திருவெண்காடு | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 22/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **<u>21.08.2025.</u>**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜரில்லை. குவிமுச 317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் மேற்படி முகவரில் வசித்து கம்பி பிட்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 03.08.2020 ம் தேதி காலை 9.00 மணி அளவில் நான் எனது அம்மாவை வேலைக்கு விடுவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு சாவடிக்கு சென்றேன். அம்மாவை விட்டுவிட்டு நான் திரும்பி வரும்போது எதிரி சீனு என்பவர் கன்னிக்கோயில் அருகில் எனது வண்டியை வழிமறித்து எங்களை எதற்காக வேகமாக போக சொல்கிறாய் என்று என்னை குச்சிக்காரி , தேவடியா மகனே என்று அசிங்கமாக திட்டி இரும்பு பைப்பால் என்னை தலையில் தாக்கினார். எதிரி சீனு என்னை தாக்கியதை பார்த்து அருகில் இருந்த மற்ற எதிரிகள் கரண், ராஜ்குமார், பாபு, பிரசாந்த், அறிவழகன் ஆகியோர்கள் என்னை சரமாரியாக கட்டை மற்றும் கையால் மாறி மாறி தாக்கினார்கள்.

2. நான் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வந்தவுடன் எதிரி சீனு உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அங்கிருந்து கிளம்பிவிட்டார். அதன் பிறகு என் அண்ணன் பரஞ்சோதி என்பவர் சிகிச்சைக்காக சீர்காழி அரசுமருத்துவமனையில் சேர்த்தார். சிகிச்சையில் இருந்த போது 04.08.2020 ம் தேதி திருவெண்காடு காவல்நிலைய போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம்

காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அதில் உ்ள்ள விபரம் எனக்கு தெரியும். **அந்த புகார் வாக்குமூலம்அசாஆ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

3. எதிரிகளுக்கும் எனக்கும் எந்த வித முன்விரோதமும் கிடையாது. வேறு யாரோ சிலர் சன்னனோடை வழியாக செல்லும் போது வேகமாக செல்லவேண்டாம் என்றுகூறியதை நான் தான் கூறினேன் என்று தவறாக நினைத்துக்கொண்டு அன்றைய தினம் எதிரிகள் என்னை தாக்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததல் குறுக்கு விசாரணை தன்னிச்சையாக முடித்துவைக்கப்பட்டது.**